**பதவிஸ்ரீபுர பிரதேச சபை - 2022**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பதவிஸ்ரீபுர பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் பதவிஸ்ரீபுர பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும்

திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்டங்கள், விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாகவும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டிருந்தது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டு கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட தவறுகளை சரி செய்யும் போது அவற்றை ஆண்டின் வருமானத்திற்கு செலவு வைத்ததனால் ஆண்டின் வருமானம் ரூபா 5,414,241 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டின் இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது இதனை திரண்ட நிதியத்தின் ஊடாக சரி செய்வதென. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | 2021 ஆண்டில் நிர்மானிக்கப்பட்ட கைப்பந்து விளையாட்டு மைதானம் மற்றும் கொன்கிரீட் இடப்பட்ட கொட்ட கஸ் சந்தி பாதைக்காக செலத்த வேண்டிய ரூபா 1,034,607 தொகை ஆண்டின் செலவிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. | நடைமுறை ஆண்டில் செலவினத் தலைப்பிற்கு உட்படுத்தியுள்ளதனை திரண்ட நிதியத்தின் ஊடாக செமமையாக்கி சரி செய்வதென. | -மேற்படி- |
| (இ) | கடந்த ஆண்டில் அன்பளிப்பாகக் கிடைத்த ரூபா 436,000 பெறுமதியான இருப்பு கணக்கீடு செய்யப்பட்டு இருக்காததுடன அந்த இருப்பிலிருந்து | கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டியுள்ளவாறு சரியாக கணக்கீடு செய்வதென. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டினுள் பயன்படுத்தி ரூபா 76,219 தொகையை செலவாகவும் இனங்கண்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய நிலையான வைப்பு வட்டி ரூபா 54,380 இனால் கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | 2023 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரிசெய்வதென. | -மேற்படி- |
| (உ) | மீளாய்வாண்டில் ரூபா 8,817,621 செலவிட்டு விடுதியின் மேல் மாடியை திருத்திய செலவினத்தை மூலதனமாக்கி இருக்கவில்லை. | 2023 இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது மூலதனமாக்க நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |
| (ஊ) | மீளாய்வாண்டில் சுகாதார அமைச்சில் இருந்து அன்பளிப்பாக கிடைத்த ரூபா 450,000 ஆன ஆயுர்வேத இருப்பு மற்றும் அவற்றிலிருந்து பயன்படுத்தி ரூபா 401,026 பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது சரிசெய்வதென. | -மேற்படி- |
| (எ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான எஞ்சிய இறுப்பு ரூபா 3,510,820 தொகை வருமான செலவுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஏ) | மீளாய்வாண்டில் அன்பளிப்பாகக் கிடைத்த ரூபா 14,000,000 பெறுமதியான நீர் பவுசரின் பெறுமதியை மூலதன உதவியாக கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் போது மூலதனமாக்க நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |
| (ஐ) | சபையின் இரண்டு அலுவலர்களிற்கு வழங்கி ரூபா 71,458 ஆன கடன் தொகையை கணக்கீடு செய்திருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஒ) | 2020 மற்றும் 2021 ஆண்டுகளிற்காக கணக்காய்வுக் கட்டணம் ரூபா 62,160 தொகை கணக்கீடு செய்யப்பட்டு இருக்காததுடன் 2022 ஆண்டில் கணக்காய்வுக் கட்டணத்திற்காக ஏற்பாடு வழங்கியிருக்கவில்லை. | விரைவில் கொடுப்பனவு செய்வதென. | -மேற்படி- |
| (ஓ) | மீளாய்வாண்டில் வழங்கிய புதிய நீர் வழங்கல்களிற்காக கிடைக்க வேண்டிய ரூபா 337,377 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | -மேற்படி- |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான 04 கணக்கு மீதிகளின் கூட்டுத் | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென. | நிதிக்கூற்றுக்கள், குறித்த ஆவணங்களுடன் |

| | | |
|---|---|---|
| தொகை மற்றும் அதற்குரிய உபயோகப் பதிவேடுகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத் தொகைக்கு இடையில் ரூபா 20,983,344 வித்தியாசமொன்றானது. | | இணங்க வேண்டும். |

**1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான ரூபா 191,314,686 பெறுமதியான 18 கணக்கு மீதிகளின் உரிதி, அட்டவணை, இறுப்பு அறிக்கை, தனிமீதி பட்டியல் மற்றும் மீதி உறுதிப்பாடுகள் சமர்ப்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிக்க முடியவில்லை.. | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதென. | கணக்கு விடயங்களிற்கு உரியதாக சரியான தகவல்களை சமர்ப்பிக்க வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டம் | | | |
| (i) | 24 பிரிவு | சபையினால் நிர்மாணிக்கப்பட்ட பாதைகள் இன்வென்றியிற்கு உட்படுத்தியிருந்ததுடன் அவ் அனைத்து பாதைகளையும் வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுப்பதென | காணப்படும் அனைத்து பாதைகளையும் இன்வென்றியிற்கு உட்படுத்தி வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 134 பிரிவு | சபை அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ள முன்னேற்றமடைந்த பிரதேசங்களை காலத்திற்கு காலம் இனங்கண்டு வீதவரி மற்றும் வரி விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அதற்காக நடவடிக்கை எடுப்பதென. | பிரதேச சபை சட்டத்தின் 134 பிரிவு பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் 1646 | சபைக்கு சொந்தமான 15 வாகனங்களின் ஓட்டக் குறிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை | கணக்காய்வின் மூலம் சுட்டிக் காட்டியவாறு தின ஓட்டக் குறிப்புகளை ஒவ்வொரு மாதமும் 15 திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதென. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வெண்டும். |
| (இ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி | | | |
| (i) | 193 ஆம் விதி | பாதீடு மற்றும் குறைநிரப்பு அங்கீகார செலவுகளுடன் செலவின விடயங்களின் உள்ளவாறான செலவுகளை ஒப்பிட்டு மிகை மற்றும் பற்றாக்குறைகளிற்கான காரணம் காட்டும் கூற்றை கணக்குகளுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டு இறுதிக் கணக்குளுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பதென. | பிரதேச சபை சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 218 ஆம் விதி | கிரயம் ரூபா 111,795,624 ஆன காணி மற்றும் கட்டிடங்களை கணிப்பீடு செய்திருக்கவில்லை. | 2015 ஆண்டிற்கு முன்னர் நிலையான சொத்துக்களின் பெறுமதி ஆவணப்படுத்தப்படாததால் கண்டறிய முடியாதுள்ளதென. | - மேற்படி - |

### 1.7.2 வரி தேவைப்பாடுகளிற்கு இணகாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2006 இன் 12 இலக்க முத்திரைக் கட்டண விஷேட (ஏற்பாடு) சட்டம் பிரகாரம் 2019 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை சம்பளத்திலிருந்து அறவிட்டிருந்த ரூபா 25,500 ஆன முத்திரைக் கட்டணத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி இருக்கவில்லை. | பணத்தை அனுப்ப நடவடிக்கை எடுப்பதென. | முத்திரைக் கட்டண விஷேட (ஏற்பாடு) சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 713,438 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,289,996 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வாடகை | 600 | 566 | 566 | 44 | 600 | 423 | 423 | 44 |
| அனுமதிப் பத்திர கட்டணம் | 675 | 549 | 647 | 161 | 675 | 484 | 435 | 259 |
| நீர் பட்டியல் | 10,000 | 8,463 | 790 | 563 | 10,000 | 9,884 | 8,994 | 890 |
| கூட்டுத் தொகை | 11,275 | 9,578 | 2,003 | 768 | 11,275 | 10,791 | 9,852 | 1,193 |

## 3. செயற்றாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை பயன்படுத்தும் பெறுமதி ரூபா 18,009,050 ஆன 05 வாகனங்களை முறையாக சுவீகரித்துக் கொள்ள மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இது தொடர்பாக உள்ளுராட்சி அமைச்சு மற்றும் மோடார் வாகன திணைக்களத்துடன் கலந்துரையாடியுள்ளதுடன் சுவீகரிக்கும் நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வதென. | முறையாக சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகார ஆளணியினர் மற்றும் உள்ளவாறான ஆளணியினரை கவனத்திற் கொள்ளும் போது 12 பதவிகளில் 20 வெற்றிடங்கள் காணப்பட்டன. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டியுள்ள சபை அலுவலர் வெற்றிடங்களை நிரப்பும் தேவைப்பாட்டின் மீது ஆளுனர் அலுவலகத்திற்கு, பிரதி பிரதான செயலாளர் அலுவலகத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளதென. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 உள்ளக கணக்கய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை ஸ்தாபித்திருந்த போதும் நடைமுறை ஆண்டின் போது போதிய உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு அலுவலர் ஒருவர் மற்றும் உள்ளக கணக்காய்வு குழு சபையினுள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் ஆளணியனரின் பற்றாக்குறை மற்றும் அதிகரித்த பணிகள் காரணமாக செயல் நடவடிக்கை திட்டத்தை அவ்வாறே செயற்படாததுடன் எதிர்காலத்தில் இந்த தவறுகளை தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | உள்ளக கணக்காய்வினை முறையாக்க வேண்டும். |

### 4.2 சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையும், வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்படும் கழிவுப் பொருட்கள் மீண்டும் கலக்கப்படுதலும், அவை சுதந்திரமாக சுற்றாடலிற்கு வெளிவிடப்படுவனாலும் வெள்ளம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவ்வாறே கடும் மழை காலங்களில் முறையற்றதாக வெளிவிடப்பட்ட கழிவுப் பொருட்கள் நீர் வாயில்களிற்கு கழுவிச் செல்லப்படுவதால் நீர்வாழ் உயிரினங்களுக்கு போன்றே மனித வர்க்கத்தினரிற்கும் சுற்றாடல் பிரச்சினை ஏற்படுவதாக அவதானிக்கப்பட்டது. | சபையின் மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களை ஈடுபடுத்தி தற்போது சேர்க்கப்படும் குப்பைகள் முறையாக சுற்றாடலிற்கு பாதிப்பு ஏற்படாதவாறு வெளிவிடப்படுவதுடன் எதிர்காலத்தில் ஒழுங்கு முறையாகவும் உரியவாறும் இதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென. | கழிவுகளை முறையாக வெளிவிட வேண்டும். |